# உள்ளான மனிதன்

...உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதிதாக்கபடுகின்றது. (2கொரி 4:16)

NOVEMBER 2013 "ULLANA MANITHAN" – THE INNER MAN VOL 1 ISSUE 3


## சொல்ல முடியாத துக்கங்கள்

மனிதர்கள் தங்கள் வாழ்கையின் சில பிரச்சனைகளை தங்கள் பெற்றோரிடமோ, கணவன் மனைவியிடமோ, மனைவி கணவனிடமோ பகிர்ந்து கொள்ளலாம், சிலவற்றை தங்கள் சகோதரரிடமோ, பிள்ளைகளிடமோ அல்லது சொந்தங்களிடமோ சொல்லி விடலாம். சிலவற்றை ஆசிரியரிடமோ, ஆலோசகரிடமோ, கடன் வழங்குபரிடமோ, பொலிசாரிடமோ, வைத்தியரிடமோ, சட்டத்தரணியிடமோ, அல்லது உங்கள் ஆலய குருக்களிடம் சொல்லி ஆலோசனைகேட்கலாம்.

இவைகளில் பிரயோஜனம் இல்லை என்று சொல்லி விடலாமோ? நிச்சயமாக அப்படிச் சொல்ல முடியாது. பல தடவைகளில் மேற்கூறியவர்களால் பலவிதமான நன்மைகளையும் அறிவுபுகுட்டுதலையும் பெற்றுள் ளோம். அவர்கள் யாவருக்கும் நன்றியுள்ளவர்களாக நாங்கள் இருக்கவேண்டும்.

மேற்கூறியவர்கள் யாவரும் பல சந்தர்பங்களில் தாங்க ளும் பலவிதமான கசப்பான வாழ்க்கை அனுபவங் களை தனிப்பட கடந்து செல்லுகிறார்கள். சில சந்தர்ப ங்களில் இவர்களும் தங்களுக்கோ அல்லது உங்களு க்கோ உதவ முடியாத சூழ்நிலையில் தள்ளப்படுகின் றனர்

அப்டியானால் யாரிடம் செல்வது? இருதயத்தின் அடி ஆழத்தில் சொல்ல முடியாத பிரச்சனைகளை யாரிடம் சொல்வது? யார் இவர்களை தீர்த்து வைக்க உதவி செய்வார்?

"வருதப்பட்டு பாரம் சுமப்பவர்ளே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப் பாறுதல் தருவேன்" (மத் 11:28) என்று இயேசுக் கிறிஸ்து சொல்லுகிறார். உலகம் கொடுக்க முடியாத சமாதானத்தை உங்களுக்கு தருவேன் என்றார்.

உங்கள் இக்கட்டான சூழ்நிலையில் இயேசுவிடம் அண்டி சேர்ந்து அவரிடம் கேளுங்கள், உண்மையுள்ள மனதுடன் கேளுங்கள், அவர் நிச்சயமாக உங்களுக்கு பதில் தருவார். இயேசு உங்களுக்கு சமாதானம் தருவார். ஆமென்!



## உண்மையான தெய்வம் யார்?

ஒரே குழப்பம்! அவரிம் கேட்டால் நாங்கள் தான் சரி என்று சொல்கின்றார். இவரிடம் கேட்டால் எல்லாம் சரிதான் என்று சொல்கின்றார். மற்றவரோ சுலபமாக எல்லாமே பிழைதான் என்று சொல்லிவிடுகின்றார்.

உண்மையான தெய்வத்தை எப்படி கண்டடைவது? நீங்கள் உண்மையாகவே கண்டுபிடிக்க விருப்பு கிறீர்களா? உண்மையாக விரும்பினால், ஒரு சின்ன ஆலோசனை... பின்வருமாறு உங்கள் மனதில் கருத் தோடு உண்மையாக சொல்லுங்கள்.

"உண்மையான தெய்வமே, நான் உம்மை அறிய ஆவலாக இருக்கின்றேன், நீர் உம்மை எனக்கு யார் என்று வெளிப்படுத்தும்."

தம்மை நோக்கி கூப்பிடுகிற யாவருக்கும், உண்மை யாய் தம்மை நோக்கி கூப்பிடுகிற யாவருக்கும், அவர் சமீபமாக இருக்கிறார் (சங் 145:18) நிச்சயமாக, ஒன்றான மெய்தேவனாகிய அவர் (யோவா 17:3) தம்மை யார் என்று உங்களுக்கு நிச்சயமாக வெளி ப்படுத்துவார்.

# மனத்திருப்தி

ஒரு மாணவன் நாள் தவறாமல் பள்ளிக்கூடம் சென்று வருவான், சிறு வயதாக இருந்தாலும் அவன் எப்போதாவது பிடிவாதமாக நான் பள்ளிக்கு போகமாட்டேன் என்று சொன்னதில்லை. பொற்றோருக்கு தங்களுடைய மகனுடைய பள்ளிக்கூட ஆர்வத்தைக் குறித்து மனத்திருப்தி, அந்த திருப்தி அநேக காலத்திற்கு செல்லவில்லை, எல்லா திருப்தியும் அவனுடைய புள்ளிகள் அட்டை வீடு வரும்வரை தான்.

பெற்றோருக்கு புள்ளியட்டையை பார்த்தவுடன் பெரும் அதிர்ச்சி. புள்ளிகளை பதியும்போது ஆசிரியர் தவறாக வேறே மாணாக்கனுடைய புள்ளியை பதிந்திருப்பார் என எண்ணி, ஆசிரியரை சந்தித்து பேசினார்கள். ஆசிரியர் கூறினார், உங்கள் மகன் பள்ளிக்கூடத்திற்கு தவறாமல் வருவது மெச்சத்தக்கது, ஆனால் அது மட்டும் போதாது, வகுப்பில் படிக்கும் படங்கள் வீடு சென்று திரும்ப படித்து, அதை நன்கு விளங்கி, விளங்காதவற்றை என்னிடமோ அல்லது விளங்கினவர்களிடமோ கேட்டு, கடினமாக தோன்றுகிற பாடங்களுக்கு இன்னும் அதிக நேரம் செலவழித்து படித்து விளங்கிக் கொள்ள வேண்டும். இப்பழக்கங்களை தன்னுடைய நாளாந்த வாழ்கையில் அவன் அப்பியாசபடுத்த வேண்டும் என கூறினார்.

ஆம்! படிப்பு ஒரு பகுதி, இப்படித்தான் எங்கள் ஆன்மீக வளர்ச்சியிலும் நாங்கள் திருப்பதி அடைந்து விடுகின்றோம். தவறாமல் ஆலயம் செல்கின்றோம், தவறாமல் போதார் பிரசங்கிப்பதை கேட்கின்றோம். இவைகள் நல்லவைகள் தான், ஆனால் கேட்பவைகளை எங்கள் வாழ்கையில் அப்பியாசப் படுத்துகின்றோமோ?

ஞாயிறு கேட்கும் பிரசங்கம், எவ்வளவு துாரம் எங்களுடன் கடந்து வருகின்றது? ஆலய வாசலுடன் நின்றுவிடக்கூடாது. எங்கள் வாழ்கையில் தேவனை கிட்டிச் சேர எங்கிளில் மாற்றத்தை அவை உண்டு பண்ண வேண்டும். அகம் கிறிஸ்துவுக்குள் மாறவேண்டும். உள்ளாந்த மனிதன் நாளுக்கு நாள் புதிதாக்க படுகின்ற நேரம் இது.

எங்கள் வாழ்கை நிலையை நாங்கள் நன்று அறிவோம் அத்துடன் தேவனும் அறிவார். சிந்தித்து செயலாற்றுவோம். கர்த்தராகிய இயேசு துணை நின்று உங்களை வழிநடத்துவார். ஆமென்!

SPONSORED BY
www.gospelguitar.com
உங்கள் ஜெபத் தேவைகளுக்கு
☎416.627.9848
innerman.info@yahoo.com

# வியாதியிலிருந்து விடுதலை

தன்னிடமிருந்த யாவையும் செலவழித்து, வைத்தியரால் கைவிடப்பட்ட நிலையிலே பன்னிரண்டு வருடமாக வியாதியால் துன்பப்பட்டுக்கொண்டு ஒரு பெண்மணி வாழ்ந்து வந்தாள். ஒரு நாள் குறிப்பிட்ட இடத்திலே ஒரே சன நெருக்கடியாக இருந்தது, ஒரு பெரியவர் விடுதலை கொடுக்கிறார் என்று அவரை சுற்றிலும் ஜனங்கள் நெருக்குவதை கண்டால்.

அந்த பெரியவரை சந்திக்க வழியில்லை என்று கருதி, அவர் கிட்டே சென்று அவரின் வஸ்திரத்தின் ஒரத்தையாகிலும் தொட்டால் நான் குணமடைவேன் என விசுவாசித்து, சன நெருக்கடி மத்தியில் அவள் சென்று அவரை வஸ்த்திரத்தை தொட்டாள். என்ன ஆச்சரியம் ஒரு நொடிப் பொழுதில் அவள் முற்றிலும், சுகமானாள். அந்த பெரியவர் இயேசு திரும்பி பார்த்து தம் சீஷரிடம், யார் என்னை தொட்டது என்று கேட்டார். அதற்கு சீஷர்கள் ஐயா எல்லா ஜனங்கள் உம்மை நெருக்கிறார்கள் ஆனால் நீர் யார் என்னை தொட்டது என கேட்கின்றீா என்றார்கள். அதற்கு இயேசு இல்லை என்னிடம் இருந்து ஒரு வல்லமை வெளியேறியதை உணர்ந்தேன், யார் என்னை தொட்டது என்றார்.

அந்த ஸ்திரி பயந்து அவர் காலில் விழுந்து நடந்தவற்றையும் தான் சுகம் அடைந்த விதத்தையும் கூறினாள். அதற்கு இயேசு, மகளே உன் விசுவாசம் உன்னை குணமாக்கியது சமாதானத்தோடே போ என்றார். பாருங்கள், ஒரு ஏழைப் பெண், 12 வருடமாக வியாதி, வைத்தியரால் கைவிடபட்ட நிலை, ஆனாலும் அவளுக்குள் ஒரு விசுவாசம் இந்த பெரியவர் இயேசு என்னை சுகமாக்குவார் என்று. ஆம், இயேசு உங்களுக்கும் சுகம் தருவார். இயேசுவிடம் சுகமடைய அவரிடம் விசுவாசத்தோடே கேளுங்கள். நிச்சயமாக இயேசு உங்களுக்கு சுகம் தருவார். ஆமென்!